# தேசிய தின செய்தி 2009

என் சக சிங்கப்பூரர்களே,வணக்கம்.

1. கடந்த ஓராண்டாக நாம் குழப்பமான, சவால் மிக்க காலத்தை எதிர்நோக்கினோம். ஜனவரியில் நம்மைச் சுற்றி கரு மேகங்கள் சூழ்ந்திருந்தன. நம் வரலாற்றிலேயே ஆகக் கடுமையான புயல் நமது பொருளியலைத் தாக்கியது. ஏற்றுமதிகள் மூன்றில் ஒரு பங்கு குறைந்தன. உலகச் சந்தைகளுக்கு நாம் ஏற்றுமதி செய்வதால் உற்பத்தித் துறை வெகுவாக வீழ்ச்சி அடைந்தது. மொத்த உள்நாட்டு உற்பத்தி 6 விழுக்காட்டிலிருந்து 9 விழுக்காடு வரை குறையும் என நாம் கணித்திருந்தோம்.

2. புயலை நாம் தவிர்க்க முடியவில்லை. ஆயினும், நாம் செயலற்று இருக்கவில்லை. அதற்குப் பதிலாக, ஒன்றுசேர்ந்து இந்த நெருக்கடியைச் சமாளிப்பதற்கு வழிவகுத்தோம். நமது வருடாந்தர பட்ஜெட்டை மார்ச்சிலிருந்து ஜனவரிக்கு முன்கொண்டு வந்தோம். பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கத் திட்டங்களை அறிவித்தோம். வேலைகள் உதவித்தொகை மற்றும் சிறப்பு இடர்-பகிர்வுத் திட்டம் ஆகியவற்றுக்கு நிதி வழங்க நமது நாட்டின் சேமிப்பிலிருந்து செலவிட்டோம்.

3. இப்போது நாம் இன்னும் வலுவான நிலையில் இருக்கிறோம். உலகப் பொருளியல் சூழ்நிலை ஓரளவு நிலைத்தன்மை அடைந்து வருகிறது. பொருளாதாரப் புயலின் ஆக மோசமான விளைவுகள் ஊழியர்களை மிகவும் கடுமையாகத் தாக்காமல் நமது நடவடிக்கைகள் காத்துள்ளன. ஆகக் கடுமையாகப் பாதிக்கப்பட்ட நாடுகளில் நம் பொருளியலும் ஒன்று. என்றாலும், உலகில் ஆகக் குறைவான வேலையின்மை விகிதங்கள் கொண்ட நாடுகளில் நம் நாடும் ஒன்றாகும். சிங்கப்பூரர்களும் உறுதியுடனும், ஒருங்கிணைப்புடனும் செயலாற்றியிருக்கின்றனர். இந்த அம்சங்கள் சிங்கப்பூர் பொருளியல் இரண்டாம் காலாண்டில் வலுவாக மீள்வதற்கு உதவின. இதன் விளைவாக, ஆண்டின் முதல் பாதியில் வளர்ச்சி Minus ஆறு புள்ளி ஐந்து விழுக்காடு ஆக இருந்தது. இது குறிப்பிடத்தக்க சுருக்கம் என்றாலும், நாம்

அஞ்சியதைப் போல் குறைவு இல்லை. ஆகவே, 2009-க்கான நம் வளர்ச்சி முன்னுரைப்பை மேல்நோக்கி திருத்தியிருக்கிறோம். நம் பொருளியல் தொடர்ந்து சுருங்கும். என்றாலும், சுருக்கம் 4 விழுக்காட்டுக்கும் 6 விழுக்காட்டுக்கும் இடையில் இருக்கும்.

4. எனினும், தற்போது நாம் உடனே மகிழ்ச்சி அடைய முடியாது. நிலைமை தொடர்ந்து தெளிவில்லாமல் இருக்கிறது. அதிக வளர்ச்சி அடைந்த பொருளியல்கள் சீக்கிரமாக மீட்சி அடையும் என நாம் எதிர்பார்க்க முடியாது. நமது ஏற்றுமதிகள் தொடர்ந்து சென்ற ஆண்டை விட குறைவாகவே உள்ளன. மேலும், Singapore Airlines போன்ற நிறுவனங்கள் இன்னும் மிகவும் சிரமமான சூழ்நிலைகளைச் சந்தித்து வருகின்றன. இவ்வாண்டின் பிற்பகுதியில் ஆட்குறைப்புகளை நாம் காணக்கூடும். எனவே, இன்னும் நாம் விழிப்புடன் இருக்க வேண்டும்.

5. இந்த ஆண்டிற்கு அப்பாலும் சிறிது காலத்திற்கு உலகச் சூழ்நிலை சிரமமாகவே இருக்கும் என நாம் எதிர்பார்க்கிறோம். ஆயினும், வெளிச் சூழ்நிலை கடுமையாக இருப்பதால் சிங்கப்பூர் வளர்ச்சி அடைய முடியாது என்று அர்த்தமில்லை. வளர்ச்சி அடைந்து முன்னேறுவதற்கு நம்மால் புதிய வழிகளைக் காண முடியும். நாம் அவற்றைக் கண்டறிய வேண்டும். வாய்ப்புகள் குறிப்பாக ஆசியாவில் தொடர்ந்து இருக்கின்றன.

6. தொழில்களும், ஊழியர்களும் ஏற்கனவே மாற்றமடைந்த உலகிற்குத் தங்களைச் சரிசெய்து கொண்டு வருகின்றனர். பல நிறுவனங்கள் அவற்றின் தொழில் நடைமுறைகளை மாற்றியுள்ளன. செலவுகளைக் குறைப்பதற்கும் வருமானங்களை உருவாக்குவதற்கும் பல வழிகளைக் கடைப்பிடிதுள்ளன. மற்றும் புதிய சந்தைகளைத் தீவிரமாகத் தேடுகின்றன. ஊழியர்கள் தங்கள் திறன்களை மேம்படுத்துவதற்கு SPUR திட்டத்தைப் பயன்படுத்தி வருகின்றனர். மாற்றத்தை எதிர்ப்பதற்குப் பதிலாக, தொழிற்சங்கங்கள் மாறிய சூழ்நிலைகளுக்கு ஏற்ப சரிசெய்துகொள்வதற்கு முதலாளிகளுடன் அணுக்கமாக

ஒத்துழைக்கின்றன. இதை நாம் தொடர்ந்து செய்ய வேண்டும்.

7. மந்தநிலையின் இடையே, நாம் உடனடி சவால்களைச் சமாளிக்கும் அதே வேளையில், எதிர்காலத்தைப் பற்றியும் சிந்திக்க வேண்டும். பொருளியல் வழிமுறைகள் குழு நம் பொருளியலை நாம் எவ்வாறு மாற்றியமைக்கலாம் என்று ஆராய்ந்து வருகிறது. இக்குழு சிங்கப்பூர் எப்படி புதிய வாய்ப்புகளைக் கண்டறியலாம், புதிய திறமைகளை உருவாக்கலாம், சமச்சீரான வளர்ச்சியைக் கட்டிக்காக்கலாம் என்பது பற்றி ஆராயும். நாம் செழிப்படைவதற்கு உதவக்கூடிய மிகச் சிறந்த யோசனைகளைத் திரட்டுவதற்குத் தனியார் துறையினரையும் சேர்த்துள்ளோம். அடுத்த ஆண்டு இக்குழு அதன் அறிக்கயைச் சமர்ப்பிக்கும் போது சிறப்பான யோசனைகளைத் திரட்டியிருக்கும் என நம்பலாம். நெருக்கடியில் நாம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள், அமெரிக்காவும், ஐரோப்பாவும் சிரமங்களிலிருந்து மீண்ட பிறகும், மற்றும் உலகப் பொருளியல் மீட்சியடைந்த பிறகும், துடிப்பான ஆசியாவில் சிங்கப்பூர் மீண்டும் முன்னோக்கி செல்லும் என்பதை உறுதிப்படுத்தும்.

8. அருகில் உள்ள, நமது தற்போதைய சிரமங்கள் நம்மை பயமுறுத்துவதைப் போல் தோன்றலாம்; ஆனால் நாம் அவற்றை ஒரு நீண்டகாலக் கண்ணோட்டத்தில் காண வேண்டும். 1959-ல் நாம் சுய அரசாங்கம் பெற்றதிலிருந்து 50 ஆண்டுகள் ஆகி விட்டன. இந்த அரை நூற்றாண்டு காலக்கட்டத்தில், சிங்கப்பூர் பல கடுமையான சவால்களைச் சந்தித்துள்ளது. அறுபதுகளில் இனக் கலவரங்கள், எழுபதுகளில் எண்ணெய் அதிர்ச்சிகள், எண்பதுகளில் ஒரு பெரிய பொருளியல் மந்தநிலை, தொண்ணூறுகளில் ஆசிய நெருக்கடி, 2001 ல் இருந்து செப்டம்பர் 11 தாக்குதல்கள் மற்றும் “சார்ஸ்” நோய். ஒவ்வொரு முறையும் நாம் ஒன்று திரண்டு வெற்றி பெற்றோம். ஆகவே, சிங்கப்பூர் தொடர்ந்து செழித்து, இன்று இந்நிலையை அடைந்திருக்கிறது.

9. ஆரம்ப காலத்தில், நாம் ஒரே மக்களாக நம் வாழ்க்கையை

தொடங்கவில்லை. நம் முன்னோர்கள் வெவ்வேறு நாடுகளிலிருந்து வந்த வெவ்வேறு மக்கள். அவர்கள் சிங்கப்பூருக்கு அவர்களுக்காகவும், அவர்களின் பிள்ளைகளுக்காகவும் பிழைப்பிற்காக வந்தனர். ஆனால் நாம் சுதந்திரத்திற்காகப் போராடியது, பிறகு தடைகளை எதிர்த்து ஒரு புதிய நாடாகப் போராடியது ஆகியவை நம்மிடையே நெருக்கத்தையும். பிணைப்பையும் ஏற்படுத்தி உள்ளன. சவால்களை எதிர் நோக்கிய ஒவ்வொரு முறையும், நாம் ஒன்று சேர்ந்து பொது நலனுக்காகச் செயலாற்றினோம். மேலும், ஒவ்வொரு வெற்றியும் நமது ஒருங்கிணைப்பை மேலும் வலுப்படுத்தி அடுத்த சவாலைச் சந்திப்பதற்கு உதவியது.

10. இந்த நெருக்கடியில் நாம் மீண்டும் அப்படியே செயல்படுகிறோம். நாம் ஒவ்வொருவரும் - அரசாங்கம் மற்றும் மக்கள், முதலாளிகள் மற்றும் தொழிற்சங்கங்கள் - ஒன்றுசேர்ந்து பணியாற்றி நிறுவனங்கள் நீடிக்க மற்றும் போட்டித்திறனுடன் இருக்க வைக்கிறோம். வேலைகள் மற்றும் வாழ்க்கையைப் பாதுகாக்கிறோம். வேலைநலன் மற்றும் "காம்கேர்" போன்ற சமுதாய பாதுகாப்புத் தூண்களை வலைகளை மேம்படுத்துகிறோம். இந்த நெருக்கடி கடுமையான சோதனையாக இருந்தாலும், நாம் மீண்டும் இந்த நிலையை நம் சமுதாய ஒப்பந்தத்தை மேலும் வலுப்படுத்துவதற்கும், மற்றும் நம் பொருளியலை மேம்படுத்துவதற்குமான ஒரு வாய்ப்பாக மாற்றுவோம் எனும் நம்பிக்கையை நமது வரலாறு நமக்கு அளிக்கிறது.

11. சளிக்காய்ச்சல் (H1N1) நோய்ப்பரவலை எதிர்நோக்குவதற்கு நாம் இதே வழியில் செயல்பட்டுள்ளோம். சிங்கப்பூரில் புதிய நோய்க்கிருமியின் பரவலைத் தாமதப்படுத்தி, மெதுவடையச் செய்வதற்கு நாம் உழைத்தோம். இந்த முயற்சிகள் சுகாதார பராமரிப்பு அமைப்புமுறை மற்றும் நிபுணர்களை மட்டும் சார்ந்திருக்கவில்லை. அது விழிப்புணர்வு மற்றும் சமூகப் பொறுப்புணர்வுடன் இருக்கின்ற குடிமக்களையும் சார்ந்திருந்தது. அந்த நோய்க்கிருமியைப் பற்றி மேலும் தெரிந்துகொள்ளவும் நம் தற்காப்புகளை மேம்படுத்திக் கொள்ளவும் நம்மால் முடிந்தது.

12. பொருளியல் மந்தநிலேயோ அல்லது சளிக்காய்ச்சலோ, இவைகளை எதிர்த்துப் போராடும்போது, ஒவ்வொரு சிங்கப்பூரரும் தனியாகச் செயல்படவில்லை. நமக்கு உறுதுணையாக சமூகமும், நாடும் இருக்கின்றன. ஒவ்வொருவரும் அவர்களால் இயன்றவற்றை முயற்சியுடன் செய்யும்வரை,சமூகம் ஒன்று சேர்ந்து அவர்களுக்கு உதவும்.

13. பல துறைகளில் நாம் வெற்றி பெறுவதற்கு இந்த ஒற்றுமை ஒரு முக்கிய காரணமாகும். அதை வலுப்படுத்த நாம் உழைக்கவேண்டும். சிங்கப்பூரர்கள் மற்றும் புதிய குடியிருப்பாளர்கள், வசதி உள்ளவர்கள் மற்றும் வசதி குறைந்தவர்கள், வெவ்வேறு இனங்கள் மற்றும் சமயங்களைச் சேர்ந்தவர்கள், நம் சமுதாயத்தில் உள்ள இந்தப் பிரிவினைகளுக்கு இடையே பாலங்களை அமைக்க நாம் உழைக்கவேண்டும். நாம் மற்ற நாடுகளில் அடிக்கடி இன மற்றும் சமயப் பூசல்களைக் காண்கிறோம். சென்ற ஆண்டு, மும்பைத் தீவிரவாத தாக்குதல்கள், சமீபத்தில் ஜக்கார்த்தாவில் குண்டு வெடிப்புகள் நடந்தன. சிங்கப்பூரில் நாம் மற்றவர்களுடைய கலாச்சாரங்கள், பழக்க வழக்கங்கள் மற்றும் நம்பிக்கைகள் ஆகியவற்றை மதிப்பதோடு, நம் சமூகங்களுக்கு இடையே நம்பிக்கையையும் நல்லிணக்கத்தையும் வளர்த்து, எல்லா பிரிவினரும் பகிர்ந்து கொள்ளும் சமயச்-சார்பற்ற பொதுவான தளத்தைப் படிப்படியாக விரிவாக்கவேண்டும். இதன் வழி, நாம் ஒரு மக்கள், ஒரு நாடு மற்றும் ஒரு சிங்கப்பூராக ஆகலாம்.

14. இந்தச் சவால்களைச் சமாளிக்க நாம் ஆயத்தமாக உள்ளோம். நாம் பொருளியலை வளர்த்தல், நம் சமுதாயத்தை வலுப்படுத்துதல் மற்றும் நம் நகரை மறு-சீரமைத்தல் ஆகியவற்றை மட்டும் செய்யவில்லை. ஒரு புதிய சிங்கப்பூரை உருவாக்குகிறோம்.

15. நாம் வசிக்கும் சுற்றுச்சூழலை மேம்படுத்துவதோடு, மேலும் சிறப்பான சமூக வசதிகள், பசுமையான இடங்கள் மற்றும் பூங்கா இணைப்புகள் முதலியவற்றையும் உருவாக்குகிறோம். மாணவர்கள் முன்னேற கூடுதலான வழிகளை உருவாக்குவதுடன் பல்கலைக்கழகத்திற்குச் செல்ல இன்னும்

அதிகமான வாய்ப்புகளை ஏற்படுத்துகிறோம். புதிய மருத்துவமனைகளைக் கட்டுகிறோம். இல்ல மருத்துவ மற்றும் தாதிமை பராமரிப்பை மேம்படுத்துகிறோம்.சுகாதார பராமரிப்பு எல்லோருக்கும் மேலும் எளிதாக கிடைக்கக்கூடியதாகவும் கட்டுப்படியானதாகவும் இருக்க வழி செய்கிறோம். நாம் நம் நகரையும் புதுப்பிக்கிறோம் தீவு முழுவதும் வீடமைப்பு பேட்டைகளை மேம்படுத்துகிறோம், பொழுதுபோக்கிற்கும். கடைகளுக்குச் செல்வதற்கும் ஒரு முதன்மையான இடமாக்க நம் நகருக்குப் புத்துயிர் கொடுக்கிறோம். மற்றும் மெரினா பே-யைச் சுற்றி ஒரு புதிய வர்த்தக இடத்தை உருவாக்குகிறோம். இவை அனைத்தும் நாளுக்கு நாள் வடிவம் பெறுகின்றன.

16. என் சக சிங்கப்பூரர்களே, நாம் சுய ஆட்சி பெற்ற அரை நூற்றாண்டில், பல முறை சோதிக்கப்பட்டுள்ளோம், ஆனால் நாம் பல வாய்ப்புகளையும் உருவாக்கியுள்ளோம். நாம் தோளோடு தோள் நின்றால் தான், மழை பெய்தாலும் வெயில் அடித்தாலும், நம்மால் ஒன்றுசேர்ந்து செயல்பட்டு சிங்கப்பூருக்கு மிகச் சிறந்த நிலைமையைப் பெற்றுத் தர முடியும். நாம் ஒரு சிறப்பான மற்றும் மேலும் துடிப்புமிக்க நாட்டை உருவாக்க முடியும், மேலும் சிங்கப்பூரை நம் இல்லம் என்று பெருமையுடன் சொல்லிக் கொள்ள அதை ஒரு தனித்தன்மை வாய்ந்த இடமாகவும் ஆக்க முடியும்.

17. எல்லா சிங்கப்பூரர்களுக்கும் என்னுடைய தேசிய தின வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

18. நன்றி. வணக்கம்.